**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி(Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு(Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line* **(10 x 1 = 10)**

1. எல்லாம் அறிந்தவர் யார்?
2. நட்பு எப்பொழுது சிறப்பு இழந்து விடும்?
3. வேதநாயகம் தமிழில் எழுதிய முதல் நாவல் எது?
4. நண்டுகள் எங்கு வாழும்?
5. ஓவியங்கள் உள்ள இடத்திற்கு பெயர் என்ன?
6. அணி என்ற சொல்லின் பொருள் யாது?
7. 'சுதந்திர தேவி' என்னும் பாடலை எழுதியவர் யார்?
8. 'பைம்பொழில்' – என்ற எடுத்துக்காட்டுக்கு ஏற்ற புணர்ச்சி விதி யாது?
9. அந்த, இந்த சுட்டுத்திரிபுகளுக்குப் பின் வல்லினம் மிகுமா?
10. உயிர் நெடிலை ஒலிப்பதற்கு உரிய கால அளவு என்ன?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. ஐம்பூதங்கள் கடவுளை எவ்வாறு வணங்குகின்றன?
2. பிளந்த பனங்கிழங்கு எதற்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது ?
3. இக்கால இலக்கியம் என்று எதனைக் கூறுகிறோம்?
4. நாட்டுப்புறப் பாடலின் இசை வடிவம் எவ்வாறு வந்தது?
5. திருவாசகத்தை இயற்றியவர் யார்?
6. சீறாப்புராணம் எனப் பெயர் பெற்றது ஏன்?
7. தமிழ் தமிழருடன் எவ்வாறெல்லாம் கலந்துள்ளது?
8. காவிரி ஆறு, தமிழகத்தின் எப்பகுதிகளை வளப்படுத்துகின்றது?
9. சித்திர சபையின் சிறப்புகள் யாவை?
10. ரைட் சகோதரர்கள் வடிவமைத்த வானூர்தியைப் பற்றி எழுதுக,
11. நெய்தல் நில மக்களுக்குரிய தொழில்கள் யாவை?
12. அணி எத்தனை வகை பெறும்? அவை யாவை?
13. நான்கு வகைப் பாக்கள் யாவை?

14. பொருள் இலக்கணம் என்பது யாது?
15. தமிழில் மயங்கொலிகள் எனப் பெறுபவை எவை? ஏன்?

## பகுதி – இ

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை? உதாரணத்துடன் விளக்குக:–
2. சிறுபஞ்சமூலம் – இச்சொல்லின் பொருளை எழுதுக:–
3. இளங்கோவடிகள் – குறிப்பு வரைக:–
4. பெரும் பொழுதுக்கு உரிய திங்கள் யாவை?
5. பாம்பும் எள்ளும் ஒன்றே என்று காளமேகப் புலவர் கூறும் கருத்தினை விளக்குக:–
6. கடுவாய்ப் பறை அரசன் நந்தி வர்மனின் புகழை எவ்வாறெல்லாம் ஒலிக்கிறது ?
7. விடை எத்தனை வகைப்படும்? உதாரணத்துடன் விளக்குக.
8. பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர் இவற்றினை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக:–

## பகுதி – ஈ

**IV** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u>விடை தருக.**

*Aswer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. முக்கூடற் பள்ளு பாடல் கருத்தினைத் தொகுத்து எழுதுக:–
2. புகழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக:–
3. கோவலன், கண்ணகியின் திருமணப் பந்தலின் அழகிய தோற்றத்தினை விளக்குக:–

## பகுதி – உ

**I.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u>கட்டுரை வடிவில் விடை தருக**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. குற்றாலமலையின் சிறப்பினைக் குறித்து ஒரு கட்டுரை வரைக:–
2. வேற்றுமை உருபுகள், அறுவகைப் பெயர்களை எழுதி, விளக்கம் கொடுத்து சரியான உதாரணம் தருக:–

.....